

# பயணிகளுக்கான சுங்கத்துறை வழிகாட்டி



SINGAPORE CUSTOMS

# சிங்கப்பூர் உங்களை வரவேற்கிறது.

சிங்கப்பூருக்கு வருகை தந்திருக்கும் அனைத்துச் சுற்றுலாப் பயணிகளையும் அன்புடன் வரவேற்கிறோம். உங்களின் நாட்கள் இனிமையாக அமைய வாழ்த்துகிறோம்.

நாடு திரும்பிகொண்டிருக்கும் சிங்கப்பூரர்கள் மற்றும் குடியிருப்பாளர்களுக்கு,

# தாயகத்திற்கு உங்களை வரவேற்கிறோம்.

# உள்ளடக்கங்கள்


| | |
|---|---|
| சிவப்பு மற்றும் பச்சை செல்வழி | 4 |
| பொருள் சேவை வரி (ஜிஎஸ்டி) நிவாரணம் | 5 |
| வரி-இல்லா மதுபானச் சலுகை | 6 |
| வரிவிதிப்புக்குரிய பொருட்கள் | 7 |
| கட்டுப்படுத்தப்பட்ட மற்றும் தடை செய்யப்பட்ட பொருட்கள் | 8 |
| வரி செலுத்துதல் | 9 |
| முக்கால் பங்கு டேங்க் விதிமுறைகள் | 10 |
| சுற்றுலாப் பயணிக்கு ஜிஎஸ்டியைத் திருப்பித்தரும் திட்டம் (TRS) | 11 |

# பயணிகளுக்கான சுங்கத்துறை வழிகாட்டி

இந்த தகவல் சிற்றேடு, சுங்கத்துறையின் வழக்கங்களையும் அனுமதி நடைமுறைகளையும் பொதுவான தகவல்களாக தருகிறது.

## சிவப்பு மற்றும் பச்சை செல்வழி

இந்த **சிவப்பு** மற்றும் **பச்சை** செல்வழி அமைப்பு, வருகைதரும் பயணிகளின் சுங்கத்துறைச் சோதனையை துரிதப்படுத்தும் நோக்கில் முக்கிய சோதனைச்சாவடிகளில் செயல்படுத்தப்படுகிறது. இந்த **சிவப்பு** மற்றும் **பச்சை** செல்வழி குறியீடுகள், வருகை மண்டபத்தின் பரிசோதனைச் சேவை முகப்புகளில் குடியேற்ற அனுமதிபெறும் இடத்தைத் தாண்டி அமைக்கப்பட்டிருக்கின்றன. சில சோதனைச்சாவடிகளில் முன்னோடியான பாதுகாப்புச் சோதனைகள் குடியேற்ற அனுமதியளிப்பதற்கு முன்பே செய்யப்படுகின்றன. நீங்கள் வரிவிதிப்புக்குரிய, வரிக்கு உட்பட்ட, கட்டுப்படுத்தப்பட்ட அல்லது தடைசெய்யப்பட்ட பொருட்கள் எவையேனும் வைத்திருந்தால், அவற்றை சோதனை செய்யும் அதிகாரியிடம் **சிவப்பு** செல்வழி அல்லது சுங்கத்துறை சோதனை செய்யுமிடத்தில் குடியேற்ற அனுமதி பெறும் முன்பே முறையே காண்பிக்க வேண்டும்.

### தெரிவிக்கப்பட வேண்டிய பொருட்கள் எதுவும் இல்லை

தெரிவிக்கப்பட வேண்டிய பொருட்கள் எதுவும் இல்லையென்றால், **பச்சை செல்வழி** இருக்கும் இடத்திற்கு செல்ல வேண்டும். அதிகாரிகள் சில தேர்ந்தெடுக்கபட்ட சோதனைகளைப் **பச்சை செல்வழியிலும்** மேற்கொள்ளலாம். சந்தேகம் ஏற்பட்டால், **சிவப்பு செல்வழி** பகுதிக்குச் சென்று உதவி நாடவும்.

### தெரிவிக்கப்பட வேண்டிய பொருட்கள் இருந்தால்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் இருந்தால், **சிவப்பு செல்வழி** பகுதிக்குச் சென்று சோதனை செய்யும் அதிகாரியிடம் தெரிவிக்கவும்:

- வரிவிலக்குச் சலுகை அல்லது பொருட் சேவை வரி விடுவிப்பு அளவைவிட அதிகமான வரிவிதிப்புக்குரிய அல்லது வரி செலுத்தப்பட வேண்டிய பொருட்கள்;
- கட்டுப்படுத்தப்பட்ட அல்லது அனுமதியில்லாத பொருட்கள்; மற்றும்/அல்லது
- தடைசெய்யப்பட்ட பொருட்கள்.

தயவுசெய்து கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களை அதன் இறக்குமதி அனுமதிச் சீட்டு அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழுடன், அவ்வாறு ஏதேனும் இருந்தால், காண்பிக்கவும்.

# பொருள் சேவை வரி (ஜிஎஸ்டி)

சிங்கப்பூரில் இறக்குமதி செய்யப்படும் அனைத்துப் பொருட்களும் பொருள் சேவை வரிக்கு (ஜிஎஸ்டி) உட்பட்டவையாகும்.
நீங்கள் ஒரு பயணியாக இருந்து, ஆனால் பின்வரும் நபராக இல்லை என்றால்

1. ஒரு விமானப் பணியாளர்; அல்லது
2. சிங்கப்பூர் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட வேலை அனுமதி, வேலை நியமன அனுமதி, மாணவர் அனுமதி, சார்பாளர் அனுமதி அல்லது நீண்ட-கால அனுமதியை வைத்திருப்பவர்.

புதிய பொருட்கள், நினைவுப் பொருட்கள், பரிசுப் பொருட்கள் மற்றும் உணவு தயாரிப்புகள் (போதை தரக்கூடிய மதுபானங்கள் மற்றும் புகையிலை, மேலும் விற்பனைக்காக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களைத் தவிர்த்து) உங்களின் தனிப்பட்ட பயன்பாட்டிற்கான பொருட்களுக்கும் ஜிஎஸ்டி நிவாரணம் கிடைக்கும். நிவாரணத்தொகை நீங்கள் எவ்வளவு நாட்கள் சிங்கப்பூருக்கு வெளியே தங்கியிருந்தீர்கள் என்பதைப் பொறுத்து அமையும்:

| சிங்கப்பூருக்கு வெளியே தங்கியிருந்த காலம் | ஜிஎஸ்டி நிவாரணம் வழங்கப்பட்ட பொருட்களின் மதிப்பு |
|---|---|
| 48 மணிநேரம் மற்றும் அதற்குமேல் | $500 |
| 48 மணிநேரத்திற்கும் குறைவாக | $100 |

உங்கள் ஜிஎஸ்டி நிவாரணத்தை தாண்டி வரி அமையும் பொருட்கள் மற்றும் வர்த்தக நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு நீங்கள் ஜிஎஸ்டி வரி செலுத்தவேண்டும் என்பதைக் குறித்துக் கொள்ளுங்கள். பயணிகள் கடல்கடந்து வாங்கிய பொருட்களின் பில் மற்றும் ரசீதுகளை, செலுத்த வேண்டிய வரியின் கணக்கீடு மற்றும் சரிபார்ப்பு தேவைகளுக்காகக் காண்பிக்க வேண்டும்.

# வரி-இல்லா மதுபானச் சலுகை

பின்வரும் நிபந்தனைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டால், மதுபானங்களுக்கான வரி-இல்லா சலுகையைப் பெறப் பயணிகளுக்கு உரிமையுள்ளது:

a) நீங்கள் 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையவர்;
b) நீங்கள் இங்கு வந்து சேர்வதற்கு முன்னர் சிங்கப்பூருக்கு வெளியே 48 மணிநேரம் அல்லது அதற்கு மேல் செலவிட்டுள்ளீர்கள்.
c) நீங்கள் மலேசியாவில் இருந்து வரவில்லை;
d) நீங்கள் கொண்டு வரும் மதுபானம் உங்கள் சொந்தப் பயன்பாட்டுக்கானது; மற்றும்
e) சிங்கப்பூருக்குள் மதுபானத்தை இறக்குமதி செய்வதற்குத் தடையில்லை.



மதுபானங்களுக்கான வரி-இல்லா சலுகை கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒன்றின் அடிப்படையில் பயணிகளுக்கு வழங்கப்படுகிறது:

| விருப்பத்தேர்வு | சாராய வகைகள் | ஒயின் | பீர் |
|---|---|---|---|
| A | 1 லிட்டர் | 1 லிட்டர் | - |
| B | 1 லிட்டர் | - | 1 லிட்டர் |
| C | - | 1 லிட்டர் | 1 லிட்டர் |
| D | - | 2 லிட்டர்கள் | - |
| E | - | - | 2 லிட்டர்கள் |

சான்றளிக்கப்பட்ட விமானப் பணியாளர்களுக்குக் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவற்றின் அடிப்படையில் மதுபானத்திற்கு வரி-இல்லா சலுகை வழங்கப்படுகின்றது.

| விருப்பத்தேர்வு | சாராய வகைகள் | ஒயின் | பீர் |
|---|---|---|---|
| A | 0.25 லிட்டர் | 1 லிட்டர் | - |
| B | 0.25 லிட்டர் | - | 1 லிட்டர் |
| C | 0.25 லிட்டர் | - | - |
| D | - | 1 லிட்டர் | - |
| E | - | - | 1 லிட்டர் |

பின்வரும் மதுபானங்களுக்கும் இந்த விருப்பத்தேர்வுகள் பொருந்தும்:

பின்வருவன போன்ற, ஆரோக்கியத்திற்காக அருந்தப்படும் மதுபானங்கள்

- யோமேஷு (ஒயின்)
- D.O.M (சாராய வகை)
- சாம்சு (சாராய வகை)

சமையலுக்காக பயன்படுத்தப்படும் மதுபான வகைகள் கீழே

- ரைஸ் ஒயின்
- குக்கிங் ஒயின் (ஒயின்)
- சாக்கே (ஒயின்)
- சோஜு (சாராய வகை)

வியாபாரத்திற்கல்லாத உங்களின் தனிப்பட்ட பயன்பாட்டிற்கான பொருட்களுக்கு மட்டுமே வரி-இல்லா சலுகைகள் அல்லது ஜிஎஸ்டி நிவாரணம் வழங்கப்படும் என்பதை தயவு செய்து கவனிக்கவும். அப்பொருட்களை விற்பதோ அல்லது தானமளிப்பதோ குற்றமாகும். வர்த்தக, வணிக அல்லது தொழில் சார்ந்த நோக்கங்களுக்காக கொண்டு வரப்படும் பொருட்களுக்கும், பிற நபர்களின் சார்பாக எடுத்துச் செல்லப்படும் பொருட்களுக்கும் வரியும் ஜிஎஸ்டியும் செலுத்தப்பட வேண்டும் என்பதால், நீங்கள் வரியும் ஜிஎஸ்டியும் செலுத்திய பின்னரே இத்தகைய பொருட்களை சிங்கப்பூருக்குள் கொண்டு வர முடியும்.

## வரிவிதிப்புக்குரிய பொருட்கள்



**சாராய வகைகள், ஒயின், பீர், ஏல், ஸ்டொட் மற்றும் போர்ட்டர் உள்ளிட்ட போதை தரும் மதுபானங்கள்**



**புகையிலைப் பொருட்கள், சிகரெட்டுகள் போன்றவை ("" என்ற குறியீடு மற்றும் செங்குத்துப் பட்டையிடப்பட்டவை உள்பட) மற்றும் சுருட்டுகள் தரப்படுத்தப்பட்ட பேக்கேஜிங் தேவைகளுக்கு இணங்கியிருக்க வேண்டும்**



**மோட்டார் ஸ்பிரிட்ஸ், டீசல் தயாரிப்புகள் மற்றும் அழுத்தபட்ட இயற்கை எரிவாயு உள்ளிட்ட மோட்டார் எரிபொருள்**

கொள்ளளவில் 0.5% -க்கு மேற்பட்ட மதுவலிமை கொண்ட பானங்கள் வரிவிதிப்புக்குரியவை, எ.கா. ஷான்டி, புட்டியில் அடைக்கபட்ட மதுபானங்கள்

1 ஜூலை 2020 முதல் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளவாறு, சிங்கப்பூருக்கு இறக்குமதி செய்யப்படும், விற்கப்படும், விற்பனைக்கு வழங்கப்படும் அல்லது விநியோகிக்கப்படும் அனைத்து சிகரெட்டுகள் மற்றும் பிற புகையிலைப் பொருட்களும் புதிய தரப்படுத்தப்பட்ட பேக்கேஜிங் (Standardised Packaging, SP) தேவைகளுக்கு இணங்கியிருக்க வேண்டும். நீங்கள் அனைத்துப் புகையிலைப் பொருட்களையும் ("SDPC" மற்றும் செங்குத்துப் பட்டை குறியீடுகளுடன் உள்ள சிகரெட்டுகள் உட்பட) அறிவிக்க வேண்டும், மேலும் புதிய தரப்படுத்தப்பட்ட பேக்கேஜிங் தேவைகளை நிறைவேற்றும் புகையிலைப் பொருட்களுக்கான வரிகளையும் ஜிஎஸ்டியையும் செலுத்த வேண்டும்.வரி-இல்லா சலுகையை மற்றும் ஜிஎஸ்டி நிவாரணத்தை மீறிய பொருட்களை வைத்துகொண்டு நீங்கள் பச்சை செல்வழியில் செல்வது குற்றமாகும்.

# கட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள்

கட்டுப்படுத்தபட்ட பொருட்கள் சிங்கப்பூரில் இறக்குமதி செய்யப்படும் முன்பு அதன் இறக்குமதி அனுமதி சீட்டு அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழை சிவப்பு செல்வழியில் சுங்க அனுமதிக்காக காண்பிக்க வேண்டும்.

பொருட்களின் பட்டியலில் உள்ளடங்குவன (ஆனால் இவை மட்டுமே வரம்பல்ல):


ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள்


கைவிலங்கு மற்றும் கைத்தடிகள்


தொலைத்தொடர்பு மற்றும் வானொலி தொடர்பு சாதனங்கள்


மருந்து மற்றும் மருத்துவத்துறை சார்ந்த பொருட்கள்


சீடிக்கள், டிவிடிக்கள், படச்சுருள்கள் மற்றும் வீடியோ கேம்கள்


விலங்குகள், பறவைகள், மீன்கள், செடிகள் மற்றும் அவை சம்பந்தப்பட்டவை

# தடைசெய்யப்பட்ட பொருட்கள்

சிங்கப்பூருக்குக் கொண்டுவர அனுமதிக்கப்படாத பொருட்களின் பட்டியலில் உள்ளடங்குவன (ஆனால் இவை மட்டுமே வரம்பல்ல):



சூயிங்கம்


பட்டாசு வகைகள்


கட்டுப்படுத்தப்பட்ட மற்றும் மனோவியல் மருந்துகள்


அரசுக்கு எதிரான மற்றும் துரோகம் இழைக்கக்கூடிய பொருட்கள்


பிஸ்டல் அல்லது ரிவால்வர் வடிவில் உள்ள சிகரெட் லைட்டர்கள்


ஆபத்தான காட்டு விலங்கினங்கள் மற்றும் அவற்றின் துணை விளைபொருட்கள்


ஆபாசமான கட்டுரைகள், வெளியீடுகள், வீடியோ டேப்புகள்/டிஸ்க்குகள் மற்றும் மென்பொருட்கள்


பதிப்புரிமை பெற்ற பிரசுரங்களின் மறுஉற்பத்தி, வீடியோ டேப்புகள், வீடியோ தட்டுகள், லேசர் தட்டுகள், ரெக்கார்டுகள் அல்லது கேஸட்டுகள்


மெல்லும் புகையிலை மற்றும் புகையிலை இல்லாத சிஷா மற்றும் மின்-சிகரெட்டுகள் போன்ற ஏதேனும் மட்டுப்படுத்தப்பட்ட புகையிலைப் பொருட்கள்

## கட்டுப்படுத்தப்பட்ட பொருட்கள்

கீழே குறிப்பிட்டுள்ள பொருட்களைக் கொண்டுவர சுங்கதுறையின் அனுமதி அவசியம்:

- 0.4 கிலோவிற்கு அதிகமான SP-இணக்கமான சிகரெட் மற்றும் இதர புகையிலைப் பொருட்கள்;
- 10 லிட்டருக்கும் மேற்பட்ட மதுபானப் பொருட்கள்;
- 10 லிட்டருக்கும் மேற்பட்ட மோட்டார் எரிபொருள் - மோட்டார் வண்டியின் உபரி கொள்கலனில்;
- 0.5 கிலோவுக்கும் மேற்பட்ட சுயபயன்பாட்டிற்கான விலையுயர்ந்த உலோகங்கள்;
- வணிகம், வர்த்தகம் அல்லது தொழில் நோக்கங்களுக்காகக் கொண்டு வரக்கூடிய, பொருள் சேவை வரி (ஜிஎஸ்டி) $300 –ஐத் தாண்டுகின்ற பொருட்கள்; அல்லது
- $400 –க்கு மேல் மதிப்புள்ள வணிக மாதிரிகளாக குறிக்கப்பட்ட பொருட்கள் (மதுபானம் மற்றும் புகையிலை தவிர).

## வரி செலுத்துதல்

வரி (duties) மற்றும் பொருள் சேவை வரி (GST) இவற்றை கீழ்க்கண்ட முறைகளில் செலுத்தலாம்:

- Customs@SG இணையத்தளம்
- சிங்கப்பூர் சுங்கத்துறை வரி செலுத்தும் அலுவலகம்

### Customs@SG இணையத்தளப் பயன்பாடு

நீங்கள் வருவதை முன்னறிவிப்பு செய்வதற்கும், சிங்கப்பூருக்கு வருவதற்கு முன்னரே வரி மற்றும்/அல்லது பொருள் சேவை வரியை (GST) செலுத்துவதற்கும் Customs@SG இணையதளப் பயன்பாடு அனுமதிக்கும்.

இந்த இணையத்தளப் பயன்பாடு, செலுத்த வேண்டிய வரி மற்றும்/அல்லது பொருள் சேவை வரியைக் கணக்கிடும், மேலும் நீங்கள் மின்-இரசீதை உங்கள் கைப்பேசியில் வரி செலுத்தியதற்கான ஆதாரமாகச் சேமித்து வைத்துக்கொள்ளலாம். நாட்டிற்குள் வந்தவுடன் பச்சை செல்வழிக்கு நேராகச் செல்லலாம்.

நீங்கள் Customs@SG இணையத்தளப் பயன்பாட்டை விரைவு தகவல் குறியீடு (QR) மூலமாகவோ அல்லது https://go.gov.sg/customs-sg -என்ற இணையப்பக்கத்தின் மூலமாகவோ அணுகலாம்.

மேலும் விவரங்களுக்கு, https://go.gov.sg/customssgapp என்ற எங்கள் இணையத்தளத்திற்குச் செல்லலாம்.

## முக்கியக் குறிப்புகள்

1. மற்றவருக்காக தடைசெய்யப்பட்ட, கட்டுப்படுத்திய, அனுமதிக்கப்படாத வரிக்குட்பட்ட பொருட்களை வைத்திருந்தால் நீங்கள் பொறுப்பாவீர்கள்.
2. உண்மையான முழுமையான அறிவிப்பை செய்யவேண்டும், தவறான அறிவிப்பை தெரியப்படுத்தினால் $10,000 வரை அபராதம் வசூலிக்கப்படும்
3. சட்டத்தின் கீழ், நீங்கள் உங்கள் பயணப்பொதியை சோதனைக்கு உட்படுத்த வேண்டும் மற்றும் அதில் உள்ளடங்கியவற்றை வெளியில் எடுத்துக் காட்டுவதற்கும், மீண்டும் உள்ளே வைப்பதற்கும் நீங்களே பொறுப்பு.
4. சிங்கப்பூரில் போதைபொருள் கடத்துவது கடுமையான குற்றமாகும், இக்குற்றத்தைச் செய்பவர்களுக்கு சிங்கப்பூர் சட்டங்களின்படி மரண தண்டனை விதிக்கப்படும்.

## முக்கால் டேங்க் விதிமுறைகள்




3/4 டேங்க் நிரப்பவில்லையெனில் அது குற்றமாகும். இக்குற்றத்தை செய்பவர்களுக்கு $500 வரை அபராதம் விதிக்கப்படலாம் அல்லது நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படலாம். இக்குற்றத்தை செய்பவர்கள் தங்கள் பயணத்தைத் தொடர விரும்பினால், அவர்கள் எரிபொருளை நிரப்ப திரும்பிச் செல்லவும் வேண்டியிருக்கும்.

சிங்கப்பூரில் பதிவுசெய்யப்பட்ட அனைத்து வாகனங்களும் நில சோதனைச்சாவடிகள் வழியாகச் சிங்கப்பூரை விட்டு வெளியேறும்போது குறைந்தபட்ச அளவுக்கு மோட்டார் வாகன எரிபொருளை நிரப்பப்பட்டிருக்க வேண்டும் (குறைந்தபட்சம் தொட்டியின் முக்காற்பங்கு அளவு) என்பதை நினைவில் கொள்க. இந்த விதியானது பெட்ரோல், டீசல் மற்றும்/அல்லது அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயுவில் ஓடுகின்ற கலப்பின வாகனங்கள் உள்பட எல்லா வாகனங்களுக்கும் பொருந்தும்.

## சுற்றுலாப்பயணிக்கு ஜிஎஸ்டியைத் திருப்பித்தரும் திட்டத்தின் கீழ் (TRS) நான் ஜிஎஸ்டி-யைத் திரும்பப் பெறுவதற்கு எனக்குத் தகுதி உள்ளதா

சிங்கப்பூருக்கான ஒரு வருகையாளராக, நீங்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு TRS-ல் பங்கேற்கும் விற்பனையாளர்களிடமிருந்து பொருட்கள் வாங்கினால் ஜிஎஸ்டி-ஐ திரும்பப் பெறலாம் –

- பொருள் வாங்கும்போது உங்களுக்கு 16 வயது அல்லது அதற்கு மேலிருக்க வேண்டும்;
- நீங்கள் சிங்கப்பூரர் அல்லது சிங்கப்பூர் நிரந்தரவாசியாக இருக்கக்கூடாது;
- சிங்கப்பூரை விட்டுசெல்லும் விமானக் குழு உறுப்பினராக இருக்கக் கூடாது; மற்றும்
- நீங்கள் பின்வரும் வேளையில் ஒரு "குறிப்பிடப்பட்ட நபராக" இருக்கக் கூடாது –
  - i) வாங்கும் தேதி;
  - ii) வாங்கிய தேதியிலிருந்து 3 மாதத்திற்கு முன்பு எதேனும் நேரத்தில்; அல்லது
  - iii) விமான நிலையத்தில் வரியைத் திருப்பித் தருமாறு கேட்கும் தேதி அன்று

குறிப்பு: நீங்கள் ஒரு "குறிப்பிடப்பட்ட நபர்", மற்றும்

A. உங்களிடம் –

i) மனிதவள அமைச்சின் வேலை அனுமதிச்சீட்டு இருந்தால் (எ.கா. வேலை அனுமதிச்சீட்டு, பயிற்சி வேலை அனுமதிச்சீட்டு, S-அனுமதிச்சீட்டு, வேலைநியமன அனுமதிச்சீட்டு, பயிற்சி வேலைநியமன அனுமதிச்சீட்டு, தனிப்பயனாக்கம் செய்யப்பட்ட வேலைநியமன அனுமதிச்சீட்டு, நுழைவு அனுமதிச்சீட்டு, வேலை விடுமுறை அனுமதிச்சீட்டு, இதர வேலை அனுமதிச்சீட்டு மற்றும் அனுமதிக் கடிதம்);

ii) சார்பாளர் அனுமதிச்சீட்டு;

iii) நீண்டகால வருகை அனுமதிச்சீட்டு மற்றும் கூடுதல் நீண்டகால வருகை அனுமதிச்சீட்டு; அல்லது

iv) மாணவர் அனுமதிச்சீட்டு; அல்லது

B. சிங்கப்பூரில் வசிப்பவர் மற்றும் பின்வரும் காரணத்தால் வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் அடையாள அட்டை வைத்திருப்பவர் எனில்

i) தூதர், தூதரக அலுவலர், அதிகாரி, நிர்வாகம், தொழில்நுட்பம், சேவைத்துறைப் பணியாளர் அல்லது தூதரகம், உயர் ஆணையம், சிங்கப்பூர் தூதரகத்தில் பணிபுரிபவர்.

ii) சர்வதேச அமைப்பை சார்ந்தவர், சிங்கப்பூரின் பிரதிநிதித்துவ அலுவலகம் மற்றும் வர்த்தக அலுவலகத்தில் பணிபுரிபவர்; அல்லது

iii) மேலே B(i) and B(ii) –இல் குறிப்பிடப்பட்டவரின் கணவர், மனைவி அல்லது குழந்தை.



திருப்புத்தொகை கிடைக்க என்ன தகுதி வேண்டும்?
மேலே குறிப்பிடப்பட்ட சுற்றுலா பயணியின் தகுதிகள் மட்டுமல்லாமல் நீங்கள் இவற்றையும் உறுதிசெய்ய வேண்டும் -

- $100 செலவழித்திருக்க வேண்டும் (ஜிஎஸ்டி உட்பட). ஒரே ஜிஎஸ்டி எண் மற்றும் கடைகளில் வாங்கிய 3 அதே-நாள் கட்டணப்பட்டிகள்/ இரசீதுகள் இந்தக் குறைந்தபட்ச கொள்முதல் தொகையில் உள்ளடங்கியிருக்கலாம்;

- TRS பதிவுகள் மற்றும் eTRS -இல் பங்குபெறும் வணிகர்

- உங்களுக்கான பரிவர்த்தனை மற்றும் உங்கள் கடவுச்சீட்டிற்குப்பரிவர்த்தனை இணைக்கப்பட்டிருத்தல்;

- ஜிஎஸ்டி திருப்புத்தொகை அனுமதி கிடைத்த 12 மணிநேரத்தில் சிங்கப்பூரை விட்டு பொருட்களுடன் வெளியேறுவது

## ஜிஎஸ்டி திருப்புத்தொகையை எவ்வாறு பெறுவது

உங்களிடம் சோதனை செய்யக்கூடிய பொருட்கள் இருந்தால்: பொருட்களை சோதனைக்கு உட்படுத்துவதற்கு முன்பாக நீங்கள் எலக்ட்ரானிக் டூரிஸ்ட் ரி:பண்ட் திட்டம் (eTRS) மூலம் டிபாச்சர் செக்-இன் ஹாலில் உள்ள சுயஉதவி சேவைக் கணினியில் (புறப்பாடு குடிவரவுக்கு முன்பு) ஜிஎஸ்டி திருப்புத்தொகைக்காக விண்ணப்பிக்கவேண்டும்.

உங்களிடம் கையில் கொண்டுசெல்லும் பொருட்கள் இருந்தால்: பொருட்களை சோதனைக்கு உட்படுத்துவதற்கு முன்பாக நீங்கள் எலக்ட்ரானிக் ட்ரூரிஸ்ட் ரி:பண்ட் திட்டம் (eTRS) மூலம் டிபாச்சர் செக்-இன் ஹாலில் உள்ள சுயஉதவி சேவைக் கணினியில் (புறப்பாடு குடிவரவுக்கு முன்பு) உங்கள் ஜிஎஸ்டி திருப்புத்தொகைக்காக விண்ணப்பிக்க வேண்டும்.

eTRS சுயஉதவி சேவைக் கணினியில் உங்கள் கடவுச்சீட்டை ஸ்கேன் செய்து கடவுச்சீட்டுடன் இணைக்கப்பட்டிருக்கும் உங்களின் eTRS பரிவர்த்தனைகளை மீட்டெடுக்க வேண்டும்.

சேவைக் கணினியில் அறிவிக்கப்பட்டால், சோதனைக்காக உங்கள் பொருட்களை சுங்கத்துறை பரிசோதனை சேவை முகப்பில், கீழ்காணும் பொருட்களை நேரில் சென்று காண்பிக்க வேண்டும்:

1) நீங்கள் வாங்கிய பொருட்கள்;
2) வணிகர் கொடுத்த அசல் கட்டணப்பட்டி/ரசீது, விலை, பொருட்களின் விளக்கம், வரிசை எண்; மற்றும்
3) அசல் கடவுச்சீட்டு மற்றும் போர்டிங் பாஸ்/விமான நுழைவுச்சீட்டு.




மேற்கண்ட எந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளையும் நீங்கள் பூர்த்திசெய்யத் தவறினால், சிங்கப்பூர் சுங்கத்துறை உங்கள் பணத்தைத் திருப்பி தராது என்பதை கவனத்தில் கொள்ளவும்.

## வசதிகள் அமைந்துள்ள இடங்கள்

ஜிஎஸ்டி ரிஃபண்ட் வசதிகள் அமைந்திருக்கும் இடங்கள்:

- சாங்கி சர்வதேச விமான நிலையம் (அனைத்து டெர்மினல்கள், ஜூவல் உள்பட)
  - டிபாச்சர் ஹால் (இமிக்ரேஷன் க்ளியரன்ஸிற்கு முன்பு), சோதனை செய்யப்பட்ட பொருட்கள்; மற்றும்
  - டிபாச்சர் ட்ரான்ஸிட் பகுதி (இமிக்ரேஷன் க்ளியரன்ஸிற்கு பின்பு), கையில் எடுத்துச் செல்லும் பொருட்கள்.
- செலீட்டார் விமான நிலையம் (இமிக்ரேஷன் வரம்பு & செக்பாயிண்ட்ஸ் அத்தாரிட்டி (ICA) –க்கு கீழே இருப்பது)

**ஞாபகத்தில் கொள்ள வேண்டியவை**

உங்கள் பொருட்களை ஆராய்ந்து, உங்கள் கோரிக்கைகளைச் சரிபார்க்க சிங்கப்பூர் சுங்கத்துறைக்கு அல்லது ICA-க்குப் போதிய நேரம் அளிக்கும் விதத்தில், நீங்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்பே விமான நிலையத்திற்கு வருவதை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

## முக்கிய குறிப்புகள்

**அனைத்து ரிஃபண்டுகளும் (பணம் அல்லது பணமில்லாதவை) க்ளோபல் டேக்ஸ் ஃப்ரீ பிரைவேட் லிமிடெட் (சென்ட்ரல் ரிஃபண்ட் கவுண்டர் ஆபரேட்டர் மூலமாக அங்கீகரிக்கப்பட்டது) என்ற நிறுவனத்தால் செயல்படுத்தப்படுகின்றன, இவை சிங்கப்பூர் கஸ்டம்ஸ் மூலமாக செயல்படுத்தப்படுவதில்லை.**

உங்களிடம் ஒப்புதல் அளிக்கப்பட்ட ரிஃபண்ட் விபரங்கள் தொடர்பான கேள்விகளுக்கு தயவுசெய்து கீழே இருக்கும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்:

Global Tax Free Pte Ltd
**தொலைபேசி:** (+65) 6513 3756 (வாரநாட்களில் காலை 9:00 மணியில் இருந்து மாலை 6:00 மணி வரை)
(+65) 6546 5074 (வார நாட்களில் மாலை 6:00 மணிக்கு பிறகு மற்றும் பொது விடுமுறை நாட்கள்)
**மின்னஞ்சல்:** crc.helpdesk@global-taxfree.com
**இணையத்தளம்:** touristrefund.sg

பின்வருபவைகளுக்கு ரிஃபண்ட் அனுமதி இல்லை:
(a) சேவைகள் (அதாவது வாடகை கார், பொழுது போக்கு, உலர் சலவை போன்றவை);
(b) சிங்கப்பூரில் முழுமையாக அல்லது பகுதி வாரியாக பயன்படுத்தப்பட்ட பொருட்கள்;
(c) வியாபாரம் அல்லது வணிக நோக்கத்திற்காக வாங்கப்பட்ட பொருட்கள்;
(d) ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள்;
(e) ஹோட்டல், விடுதி, போர்டிங் வீடு அல்லது இதைப்போன்ற பிற குடியிருப்புகளில் தங்குதல்; மற்றும்
(f) ஆய்விற்கு பொருட்களை கொடுக்காமல் இருத்தல்

பின்வரும் செயல்களை செய்தால் அதற்கு கடுமையான தண்டனை உண்டு என்பதை நினைவில் கொள்ளுங்கள், இதற்கு அபராதமும் மற்றும் சிறைத்தண்டனையும் கூட உண்டு:

- சிங்கப்பூர் சுங்கத்துறையில் ரிஃபண்ட் விண்ணப்பத்தில் ஏதேனும் தவறான அறிவிப்பை கொடுப்பது; மற்றும்
- ரிஃபண்ட் விண்ணப்பமானது அங்கீகரிக்கப்பட்ட பிறகு, டிபாச்சர் செக்-இன் ஹால் / ட்ரான்ஸிட் பகுதியில் இருக்கும் பொருட்களை எடுத்தல் அல்லது பொருட்களை வேறு யாராவது ஒருவரிடம் கொடுத்தல் போன்றவை.

சுற்றுலா பயணிகளுக்கான ரிஃபண்ட் திட்டத்தினை பற்றி மேலும் தகவல்களுக்கு, தயவு செய்து பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்:

Inland Revenue Authority of Singapore
**தொலைபேசி:** (+65) 6356 8633
**மின்னஞ்சல்:** gst@iras.gov.sg
**இணையத்தளம்:** www.iras.gov.sg

அனைத்துத் தரப்பினருக்கு இடையே பரஸ்பர மரியாதை இருக்க வேண்டும்.

**உங்களுடைய உரிமைகள்**

எங்களுடைய அதிகாரிகள் உங்களிடம் பணிவன்புடனும், பாரபட்சமின்றியும், நேர்மையாகவும் நடந்து கொள்ள வேண்டும் என, ஒரு பயணியாக நீங்கள் எதிர்பார்ப்பதற்கு உங்களுக்கு உரிமையுள்ளது.

**எங்களுடைய உரிமைகள்**பொது மக்களின் ஒத்துழைப்பு மற்றும் ஆதரவோடு எங்களுடைய அதிகாரிகள் தங்களுடைய பணியைச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உங்களுடைய கனிவான புரிந்துணர்வை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

*இந்த தகவல் சிற்றேடு ஒரு வழிகாட்டி மட்டுமே, மேலும் இதில் சுங்கத்துறையின் நடைமுறைகள் மற்றும் தேவைகள் பற்றிய முழுமையான பட்டியல் இல்லை. மேலும் விபரங்களுக்கு, www.customs.gov.sg என்ற எங்களின் இணையத்தளத்தைப் பார்வையிடவும்.*


**சிங்கப்பூர் சுங்கத்துறை**

வாடிக்கையாளர் சேவை நிலையத்தின் எண்: *(+65) 6355 2000*

மின்னஞ்சல்: *customs_feedback@customs.gov.sg*

முகவரி: 55 Newton Road, Revenue House, Singapore 307987


*இதற்கு மாற்றாக, கீழே கொடுக்கப்பட்டுள்ள QR குறியீட்டை பயன்படுத்தியும் எங்களின் இணையத்தளத்தை அணுகலாம்.*